**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**MCOP CASE NO.213/2025**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54-வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.K.கிருஷ்ண பிரியா, M.L., தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | -திருமதி.கிருஷ்ணவேணி **PW-1** | தொழில் | - |
| த/க பெயர் | - | வயது | - |
| கிராமம் | - | தாலுக்கா | - |

**முதல் விசாரணை:-**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

| S.No. | Documents | Exhibits No. |
|---|---|---|
| 1. | நாமக்கல் மாவட்டம், வாழவந்திநாடு காவல்நிலைய குற்ற எண்.82/2023, முதல் தவகல் அறிக்கை ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.1 |
| 2. | மாதிரி வரைபடம் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.2 |

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.24 17:08:18 +0530

| | | |
|---|---|---|
| 3. | கொல்லிமலை அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு | ம.த.சா.ஆ.3 |
| 4. | கொல்லிமலை அரசு மருத்துவமனை காயச்சான்றிதழ் ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.4 |
| 5. | குற்ற இறுதி அறிக்கை ஆன்லைன் நகல் | ம.த.சா.ஆ.5 |
| 6. | டிஸ்சார்ஜ் சம்மரி நகல் (இந்த ஆவணம் 2-ம் மனுதாரரின் ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டது.) | ம.த.சா.ஆ.6 |
| 7. | 18.02.2023ம் தேதி 2ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு | ம.த.சா.ஆ.7 |
| 8. | அஞ்சல் ஒப்புகை அட்டை | ம.த.சா.ஆ.8 |

**<u>2-ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் விபத்து சமயத்தில் பயணம் செய்த பேருந்தில் மொத்தம் 24 பயணிகளுக்கு மேல் பயணம் செய்தார்கள் என்றால் சரியல்ல எல்லா சீட்டுகளும் சரியாக ஆள் அமர்ந்து வந்தார்கள் 24 பயணிகளுக்குள்ளாக தான் பயணம் செய்தோம். பேருந்து மலையிலிருந்து கீழே விழுந்து தான்

K KRISHNA PRIYA
Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.24 17:08:23 +0530

விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமான நபர்கள் மேற்படி பேருந்தில் பயணம் செய்ததினால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. ம.த.சா.ஆ.4 – காயச் சான்றிதழில் எனக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று போடப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை, எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. தகுதி சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமான ஆட்களை ஏற்றிக்கொண்டு மேற்படி பஸ் ஓட்டியதனால் தான் விபத்து ஏற்பட்டது என்பதனால் இழப்பீடு செலுத்தும் கடமை இல்லை என்றும், 1–ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

K KRISHNA PRIYA

Digitally signed by K KRISHNA PRIYA
Date: 2026.02.24 17:08:30 +0530

Chief Judicial Magistrate,
Erode.